# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 33 July- 2020 Issue - 7**


ஆசிரியர் உரை

## என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன் !

"**பிராணன்**" என்றால் "**ஜீவன்**" அல்லது "**உயிர்**" என்று பொருள். இந்த உயிர் நம் எல்லோருக்கும் சர்வவல்ல தேவனால் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருகிறது. இலவசமாகப் பெறப்பட்ட ஒன்றுதானே, அது எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும் என்று யாரும் நினைப்பதில்லை. மாறாக, உயிர் பற்றிய பயம் மனிதனுக்கு ஆதி முதல் இருந்தே வந்துள்ளது. வந்தாலும் வந்தது இக்கொடிய **கொரோனா,** உலகின் எந்திக்கிலும் இதே பேச்சு. கடந்த ஒரு நூற்றாண்டில் உலகம் கண்டிராத இப்பெருந்தொற்று மனித இனத்தின் இயல்பு வாழ்க்கையை முடக்கிப்போட்டு விட்டது. தூங்குகிற நேரம் தவிர்த்து எஞ்சிய நேரமெல்லாம் உயிர்பயம் பற்றிய சிந்தை தான் மேலோங்கி நிற்கிறது. இது போதாதென்று ஊடகங்கள் **ஏதோ எங்களால் முடிந்தது** என்பது போல, எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு வருகிறது. இக்கொடிய கொரோனாவிலிருந்து தப்பி எப்படி உயிரைக் காப்பாற்றிக் கொள்வது என்பதற்கான ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் அரசாங்கத்திடமிருந்தும், தன்னார்வ அமைப்பு களிடமிருந்தும் வாரி வழங்கப்படுகிறது. கொட்டி வைக்கத்தான் இடமில்லை. ஏதோ இந்தக் கோவிட் – 19 லிருந்து தப்பிவிட்டால் **சாகாவரம்** கிடைத்துவிடுவது போல பொதுமக்கள் தங்கள் அறிவுக்கும், திராணிக்கும் மேலாக முயற்சிகள் எடுக்கத் துடிக்கிறார்கள்.

இந்த யதார்த்த நிலையை மோப்பம் பிடித்த கிறிஸ்தவம், காலங்காலமான தங்கள் இறை நம்பிக்கைச் செயல்பாடுகளுக்குக் கட்டாய ஓய்வு கொடுத்துவிட்டுத் தங்களைப் பத்தோடு பதினொன்றாக இணைத்துக் கொண்டு, பவ்வியமாகப் பக்கவாத்தியம் வாசித்துக் கொண்டுள்ளது. அத்தோடு, இருட்டில் போகப் பயப்படுகிறவன் பாட்டுப் பாடுவது போல், உயிர் பயத்தைப் போக்க, பக்திக் காரியங்களைப் புழுதிதட்டி எடுத்து அதற்குள்ளாகப் போய் பதுங்கிக் கொள்ளப் பார்க்கிறது. இது தான் உண்மை. ஆயினும், நம்மைப் போன்று கிறிஸ்தவனாக இருந்த அப்போஸ்தலன் பவுல் முற்றிலும் வித்தியாசமானவராக இருந்துள்ளார். தேவனுக்கான தன் ஊழிய வாழ்வில் ஏராளமான அச்சுறுத்துதல்களை எதிர் கொண்டிருந்தாலும், உயிர் என்பது அவருக்கு ஒரு பொருட்டாகவே இருக்கவில்லை! அவருடைய நாட்களில் **கொரோனா** இருந்திருந்தால்தானே என்கிறீர்களா? சரியான கேள்வி தான். ஆனால், கொரோனாவை விஞ்சும் கொடிய மனிதர்கள் அவரது உயிரை எடுக்க வரிந்து கட்டிக் கொண்டு நின்றார்களே! அது போதாதா? மனிதன் அசர வில்லையே! என்ன மனிதனோ, என்கிறீர்களோ? எனக்கும் தான் புரியவில்லை.

இப்படி மேலோகக் காரியங்களில் மெருகேறியிருந்த பவுலடியார், தன் ஊழியப் பயணத்தின் ஒரு கட்டத்தில், என் பிராணனை நான் அருமையாக எண்ணேன் என்று சொன்னார். சரி, எப்பொழுது இப்படிச் சொன்னார், யாரிடம் இப்படிச் சொன்னார் என்பதை அறிந்து கொள்ள நமது வழக்கத்தின்படி இதன் பின்னணிக் காரியங்களுக்குள்ளாகக் கடந்து வந்து விடலாம். சரியா?

கிறிஸ்துவின் சீடர்களைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி கங்கணம் கட்டிக் கொண்ட சவுல், இத்தீஞ்செயலை நிறைவேற்றப் பெற்றுக்கொண்ட ஆதரவுக் கடிதத்தோடு தமஸ்கு பட்டணத்துக்குந் தீவிரித்துப் போனபோது, வழியில் இயேசு ஆண்டவரால் அற்புதவிதமாகச் சந்திக்கப்பட்டு, கிறிஸ்துவின் ஊழியத்துக்காகப் பணிக்கப்பட்டான். பவுலாக மாறிய இந்த அப்போஸ்தலன், தான் பிடிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும்படி மூன்று நற்செயதிப் பயணங்களை மேற்கொண்டார். இதில், அதிக காலத்தையும், தொலை தூரத்தையும் எடுத்துக் கொண்ட பயணம் மூன்றாவது பயணம். இப்பயணத்தின் பதினெட்டாவது நிறுத்தம் மிலேத்து பட்டணம். தான் இருந்த மிலேத்துவுக்கு சுமார் 28 மைல் தொலை விலிருந்த எபேசு பட்டணத்துக் கர்த்தருடைய சபை மூப்பர்களை வரவழைத்து அவர்களோடு உரையாடினார் (அப்.20:17-31).

எபேசு மூப்பருடனான இச்சந்திப்பு, உரையாடல் என்பதைத் தாண்டி, வரும் காலங்களில் சபைக் காரியங்களில் அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற புத்திமதிகளையும், எச்சரிப்புகளையும் கொண்டிருந்ததது. அவர்கள் எப்படி இருக்க வேண்டும் மென்று சொல்லுவதற்கு முன்பாக, அவர்களுக்கு மத்தியில் **தான்** எப்படியிருந்தேன் என்பதை எடுத்துக் கொடுக்கிறார். **செய்யவும், உபதேசிக்கவும்** [அப் 1:2] என்பது இயேசு ஆண்டவரின் **மாதிரி.** இந்த மாதிரியைத் தான் பவுலடியார் பின்பற்றியுள்ளார். அதிகாரம் 20 :18-21-ல் அடங்கியுள்ள வசனப் பகுதியில், **ஒரு கிறிஸ்தவனாக** எப்படி **உண்மையுடனும்,** ஒரு கிறிஸ்துவின் ஊழியக்காரனாக எப்படி **வைராக்கியத்துடனும்,** ஒரு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக எப்படிப் **பொறுப்புணர்வோடும்** நடந்து கொண்டேன் என்று எடுத்துச் சொல்லியுள்ளார்.

இப்படிப் பேசி முடிந்துவிட்டுத் தான் எருசலேம் போவதைக் குறித்துக் குறிப்பிடுகிறார். எருசலேம் போவது **தனக்கு அனுகூலமான ஒன்றல்ல** என்பது தெரிந்தே **அடுத்த இலக்கு** எருசலேம் என்கிறார். பாருங்கள் அங்கே எனக்கு நேரிடுங் காரியங்களை அறியேன். கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன் [20:22,23] என்று.

இத்தனைக்கும், அவர் மனமாற்றமடைந்த அந்நாளிலிருந்து எருசலேம் சுகமான அனுபவங்களைக் கொடுத்த ஓர் இடமாக இருக்கவில்லை. எப்படியெனில், அனனியாவால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஆசையோடு எருசலேம் போனபோது **சந்தேகப்பட்டு** சீடன் என்று நம்பாமல், ஏற்றுக்கொள்ள மறுத்தனர் [அப் 9:26,27] பிறகு, தன் முதல் நற்செய்திப் பயணத்தை முடித்து எருசலேம் வந்தபோது விருத்தசேதனம் சம்பந்தமாக **மிகுந்த வாக்குவாதமும், தர்க்கமும்** உண்டானது. [15-1,2]. இருப்பினும், ஊழியக் காரியங்களினிமித்தம் தான் அங்கே போக வேண்டுமென்பதில் தீவிரமாய் இருந்தார். அப்படி அங்கே போன பிறகு அபாண்டமாகப் பழிபோடப்பட்டு, கைது செய்து துன்புறுத்தப்பட்டு, நியாயாசனத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டார் [அப்.21:27-40].

இக்கட்டத்தில் தான் **ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன். என் பிரணானையும் நான்** அருமையாக எண்ணேன் என்று ஆணித்தரமாக கூறியுள்ளார். அப்படியானால், பவுலடியாருக்கு அவருடைய உயிரைத்

தாண்டி ஏதோ நோக்கங்கள் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அப்படித்தானே! அப்படியானால் அந்நோக்கங்கள் என்ன என்பதைக் கண்டுபிடிக்க நாம் பூத கண்ணாடியைத் தூக்கிக் கொண்டு அலையத் தேவை இல்லை. அதே வசனத்தின் எஞ்சிய வரிகளில் அதற்கான விடை கொடுக்கப்பட்டுள்ளது. என் **ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும்,** தேவனுடைய **கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கும்** நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற **ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்** (20:24). இவ்வரிகளில், அவருக்கு ஒரு மூன்று நோக்கங்கள் இருப்பது தெளிவாகிறது.

சரி, இப்பொழுது அந்நோக்கங்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்றும் பார்ப்போம்.

### I என் ஓட்டத்தை சந்தோஷமாக முடிக்க வேண்டும்

தன் உயிருக்கும் மேலாகப் பவுலடியார் கொண்டிருந்த நோக்கங்களில் முதலாவதாக வருவது, தன் பக்தி ஓட்டத்தைச் சந்தோஷமாக முடிக்க வேண்டும் என்பது.

ஓட்டம் என்பது போட்டியோடும், வெற்றியோடும் சம்பந்தப்பட்ட ஒன்று. கிறிஸ்தவ வாழ்க்கை ஓர் ஓட்டத்திற்குச் சமமானதாகப் பல வேத வசனங்களில் பேசப்பட்டிருக்கிறது. தங்களது பக்தி ஓட்டத்தில் பலவீனமாகக் காணப்பட்ட கொரிந்து சபையாருக்குப் பவுல் அப்போஸ்தலன் தன் முதலாம் நிருபத்தில் இவ்விதம் எழுதியுள்ளார். ''பந்தய சாலையில் ஓடுகிறவர் களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத் தக்கதாக ஓடுங்கள்'' என்று (I கொரி. 9:24). ஓட்டம் பெற்றுக் கொள்ளத் தக்கதாக இருந்தால்தான் அந்த ஓட்டத்தை ஒருவன் சந்தோஷத்தோடே முடிக்க முடியும்.

கொரிந்தியருக்கு ஓட்டப்பந்தயம் பற்றிய புரிதல் இருந்தது. அந்நாட்களில், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொரிந்து பட்டணத்திலிருந்து ஒரு 9 மைல் தொலைவில் இருந்த கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற ஓட்டப்பந்தயத் திருவிழா கிரேக்கர்களுக்கு மத்தியில் மிகவும் பிரபலம். 10 மாத கடும் பயிற்சிக்குப் பிறகே ஒருவன் இப்பந்தயத்தில் பங்கு பெற முடியும். பயிற்சியின்போது உணவுக்கட்டுப்பாடு உட்பட பல கட்டுப் பாடுகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அதைவிட, முக்கியமாக, போட்டிக்கு முன்பு தான் ஒரு ''சுத்தமான கிரேக்கன்''

என்று நிரூபிக்க வேண்டும். இவ்வளவு கெடுபிடிகளுக்குப் பிறகு போட்டியில் கலந்து கொண்டாலும் **முதல் இடம்** பிடிப்பவனுக்கே பரிசு. நம்ம ஊரில் உள்ளது போல முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு அப்புறம் ஆறுதல் பரிசு என்றெல்லாம் கிடையாது.

ஆனால், கிறிஸ்தவ ஓட்டம் என்பது முற்றிலும் வேறுபட்ட ஓட்டம். இந்த ஓட்டத்தில் யார் வேண்டுமானாலும் வெற்றிபெற முடியும். எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் பரிசு கிடைக்கும். ஆம், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி ஒருவன் தன்னை கிறிஸ்தவன் (அப்.11:26) என்ற அந்தஸ்துக்கு உயர்த்தி, கிறிஸ்தவ ஓட்டத்தில் இணைந்து, சீரோடு ஓடி, சிறப்பாக முடிக்கும் எல்லோருக்கும் பரிசு உண்டு. ஏமாற்றத்திற்கு அங்கு வேலையே இல்லை. இது குறித்து பவுல் அப்போஸ்தலன், தீமோத் தேயுவுக்குக் கூறுவதைப் பாருங்கள். ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்'' இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது. ...எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்ன மாகுதலை விரும்பும் **யாவருக்கும்** அதைத் தந்தருளுவார். (II தீமோ.4:7,8).

அப்படியானால், அருமையானவர்களே! நம்முடைய கிறிஸ்தவ ஓட்டம் எப்படிப்பட்டதாயுள்ளது? முதலாவது, நீதியுள்ள கிரீடத்துக்கான ஓட்டத்தில் புதிய ஏற்பாட்டு சட்ட விதிகளின்படி நம்மை இணைத்துக் கொண்டுள்ளோமா? அக்காலத்தில், கிரேக்க ரல்லாதவர்கள் பயிற்சிகளை எடுத்திருந்தாலும் பந்தயத்தில் பங்குபெற முடியாது. அதுபோல, புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவராக மாறாவிட்டால் நாமும் பங்கு பெற முடியாது. பந்தயத்திலேயே பங்கு பெறாத நிலையில் பந்தயப் பொருளை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. ஆகவே, முதலாவது நாம், விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, கர்த்தராகிய இயேசுவாலே அவருடைய சபையில் சேர்க்கப்படுவோம். அதன் மூலம் நம்மை ஓட்டத்தில் இணைத்துக் கொண்டு, இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடி....'' (எபி.12:1) பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்ளுவோம்.

### II கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்

தன் உயிருக்கும் மேலாகப் பவுலடியார் கொண்டிருந்த நோக்கங்களில் இரண்டாவதாக வருவது, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்பது.

கிறிஸ்துவின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல்'' ஆகியவைகளை உள்ளடக்கியதுதான் நற்செய்தி (1 கொரி. 15:1–3). இயேசுவின் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப் பட்டது போல், ''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.'' (மத்.28:18–20) என்ற நேரிடையான கட்டளை பவுலுக்கு இல்லை. ஆயினும், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் முக்ணுயத் துவத்தை முற்றுமுடிய உணர்ந்திருந்தார். ஆகவேதான், I கொரிந்தியர் 9:16–ல், ''சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியா திருந்தால், எனக்கு ஐயோ'' என்று கூறியுள்ளார்.

தான் பிரசங்கித்த சுவிசேஷத்தைப் பவுலடியார் ''கிருபையின் சுவிசேஷம்'' என்று குறிப்பிடுகிறார். இது தவிர இந்த சுவிசேஷம் வேதாகமத்தில் வேறு ஆறு நிலைகளில் சொல்லப்பட்டுள்ளது. ''தேவனுடைய சுவிசேஷம்'' (ரோமர் 1:1). ''கிறிஸ்துவின் சுவிசேஷம்'' (II கொரி 2:12), ''ராஜ்ஜியத்தின் சுவிசேஷம்'' (மத்.24:14) ''சமாதானத்தின் சுவிசேஷம்'' (எபே.6:15) ''இரட்சிப்பின் சுவிசேஷம்'' (எபே.1:13) மற்றும் ''மகிமையின் சுவிசேஷம்'' (II கொரி.4:4). சுவிசேஷம் என்பது ஒன்றே என்றுதான். பவுலடியார் கலாத்தியருக்கு எழுதும்போது இதை உறுதிப்படுத்தியுள்ளார் ''**வேறொரு சுவிசேஷம் இல்லையே**'' என்று (கலா.1:7). ஆயினும், ''பாவிகளில் பிரதான பாவி'' என்று தன்னை அழைத்துக் கொள்ளும் பவுலடியார், தனக்கு எவ்விதத் தகுதியுமில்லாமல் இந்தச் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்டபடியால் இதை ''கிருபையின் சுவிசேஷம்'' என்று அழைக்கிறார்.

இப்படிப்பட்ட சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைத் தன் உயிரினும் மேலாகக் கருதியுள்ளார். அதற்காக என்ன விலை கொடுக்கவும் தயாராக இருந்துள்ளார். இந்த சுவிசேஷத்தைத் தன்னால் ''இயன்றமட்டும்'' பிரசங்கிக்க விரும்பியுள்ளார் (ரோமர் 1:15). இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவ பெலனாயிருக்கும் இச்சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அவர் ஒருபோதும் ''வெட்கப்படவில்லை'' (ரோமர் 1:16).

அருமையானவர்களே! இக்காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? கிறிஸ்துவைப் பின்பற்றின பவுலுக்கு அது அவர்மேல் விழுந்த கடமையாக இருக்குமானால், அதே கிறிஸ்துவானவரைப் பின்பற்றும் நம்மீதும் விழுந்த கடமைதானே! ''கடமை'' என்பது செய்து தீர வேண்டிய இன்றியமையாத செயல். அப்படியானால், நாம் நம் வாழ்வில் நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்கிறோமா! சொல்லுங்கள். யூதானாகிய பவுலுக்கே இது, கிருபையின் சுவிசேஷமாக, அதாவது தகுதியில்லாத நிலையிலே பெற்றுக்கொண்டாத இருக்குமானால், புறவினத்தைச் சார்ந்த நமக்கு படுசுத்தமாகத் தகுதியில்லாத நிலையில்தானே கிடைத்திருக்கிறது. நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? கிறிஸ்துவின் நற்செய்தியை நாம் பிறருக்கு அறிவிக்காவிட்டால் நமக்கும் ''ஐயோ'' என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

III **இயேசுவிடம் பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும்.**

தன் உயிருக்கும் மேலாகப் பவுலடியார் கொண்டிருந்த ஆசைகளில் மூன்றாவதாக வருவது, ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது.

ஊழியம் என்று வரும்போது, பவுலடியார் மனதில் தோன்றுவது தமஸ்கு செல்லும் வழியில் தான் இயேசுவால் சந்திக்கப்பட்ட அந்தக் காட்சிதான். அக்காட்சி அவர் நெஞ்சில் ஆழப்பதிந்து விட்டது. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அது குறித்துப் பேசாமல் இருக்கமாட்டார். தன்னைக் ''கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று (கலா.1:10) பெருமையோடு அழைத்துக் கொள்ளும் பவுலடியார், ''நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, **இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்**'' (கலா 1:12) என்று மார் தட்டுகிறார். இன்னும், தான் ஒரு விசாரணைக் கைதியாக அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நின்றபோது, அகிரிப்பா ராஜாவே, நான் **அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை**'' என்று கூறினான் (அப்.26:19). ஆக, பவுலடியார் பெற்றுக் கொண்ட ஊழியம் இயேசுவிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஒன்று என்பதை எண்ணி எண்ணிப் பவுல் புளகாங்கிதம் அடைந்துள்ளார்.

இப்படி இயேசுவிடம் பெற்றுக்கொண்டதை **நிறைவேற்ற வேண்டுமென்று** ஆசைப்பட்டு, **கிறிஸ்துவின் மாதிரியைப்** பின்பற்றுவதில் தீவிரமாயிருந்த பவுலடியார். [I கொரி. 11:1] இக்காரியத்திலும் பின்பற்றியுள்ளார். எப்படியெனில், நியாயப் பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும், அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, **நிறைவேற்றுகிறதற்கே** வந்தேன்'' என்றார் [மத்.5:17]. அவர் சொன்னபடியே சிலுவையிலே வெற்றி சிறந்தார். [கொலோ. 2:14,15] ஆக, **நிறைவேற்றுதல்** என்றால் பெற்றுக்கொண்டதைச் செய்து முடிப்பது. அதுபோலவே, பவுலடியாரும் பெற்றுக்கொண்டதை நிறைவேற்றினார். [2தீமோ.4:7].

அருமையானவர்களே! ஊழியக்காரியங்களிலும், அதை நிறைவேற்றுகிற காரியத்திலும் நாம் எந்நிலையில் உள்ளோம்? பவுலடியார் போன்று நாம் நேரிடையாக ஊழியத்துக்கு அழைக்கப்படாவிட்டாலும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் அழைக்கப்பட்டுள்ளோம் [II தெச.2:14] அப்படி அழைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் ''அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரமாக நடக்க வேண்டியது அவசியம் [எபே.4:1]. இக்காரியத்தில் தீமோத்தேயு எவ்விதக் குறையும் வைத்துவிடக் கூடாது என்று எண்ணி, ''நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு. தீங்கநுபவி, சுவிசேஷனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று'' என்று கூறினார். [II தீமோ.4:5]. பெற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுவது பவுலடியாருக்கும், தீமோத்தேயு போன்றவர்களுக்கும் அவசியமாக இருக்குமானால், நமக்கு மாத்திரம் இருக்காதா?

ஆக, ஒரு கிறிஸ்தவனாக கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும், கிறிஸ்துவின் சபைக்கும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கும் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் எதுவாக இருந்தாலும், அவைகளைக் குறைவில்லாமல் நிறைவேற்றி நம்முடைய பரலோக பாக்கியத்தை உறுதி செய்து கொள்வோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்! ✝

# எந்த சபை சரியானது?

Bro. J.C. **சோட்**

இவ்வுலகில் அநேக சபைகள் இருக்கின்றன. ஆனால், ஒரேயொரு சபையைத் தான் தேவன் அங்கீகரிப்பார் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் (கொலோ.1:18). ஒரே சரீரரும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு (எபேசியர் 4:4-6). அப்படியானால், ஒரே ஒரு சபை தான் சரியானதாக இருக்க முடியும். அந்தச் சபை எது?

**1. சபை இயேசுகிறிஸ்து கட்டினது**

மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையை கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்தேயு 16:18).

**2. சபை எருசலேமை ஆரம்பமாகக் கொண்டது**

அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினால் பிரசங்கிக்கப்படவும் வேண்டியது (லுக்கா 24:47).

**3. சபை கி.பி. 33ல் ஸ்தாபிக்கப்பட்டது**

தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப்.2:47).

**4. சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறது**

ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள் கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர் 16:16). நீங்களே கிறிஸ்துவின் சரீரமாகவும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1கொரி-12:27). எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி,

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபேசியர் 1:22,23).

**5. சபையில் கிறிஸ்து தலைவராக ஆளுகை செய்கிறார்**

அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

**6. சபை இயேசுவின் இரத்தத்தால் வாங்கப்பட்டது**

ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் (அப்.20:28).

**7. சபை கிறிஸ்துவால் அன்புகூரப்படுகிறது**

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள் அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து (எபேசியர் 5:25).

**8. சபைக்கு கிறிஸ்து இரட்சகராயிருக்கிறார்**

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கு இரட்சகராயிருக்கிறார் (எபேசியர் 5:23).

**9. சபை கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டது**

மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்: பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்தேயு 16:18). போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (1 கொரி 3:11).

**10. சபை அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகிறார்கள்**

முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று (அப்.11:26).

### 11. சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சபை என்றழைக்கப்படுகிறது

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவான சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் [எபேசியர் 1:22,23].

### 12. சபை ஒரே சரீரம் என்றழைக்கப்படுகிறது

உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு [எபேசியர் 4:4].

### 13. சபை இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்

தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் [அப்.2:47]

### 14. சபையை கிறிஸ்து மறுபடியும் கூட்டிச் செல்வார்

கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும், தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் [எபேசியர் 5:27].

புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் இந்தச் சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்து, புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி தேவனை ஆராதித்து, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போலவே வாழும் ஜனங்களை உள்ளடக்கிய ஓர் மகிமையான கூட்டமாகும். மார்க்கப் பிரிவினைச் சபையாரின் முரண்பாடான உபதேசங்கள் பலவிதமான பெயர்கள், ஆராதனை முறைகள், இரட்சிப்பின் வழிகள் போன்றவற்றை மறைப்பதற்குப் பரந்து விரிந்த பெரிய குடை எதுவுமே இல்லை. எல்லாச் சபைகளும் ஒன்றுதான் நீங்கள் இரட்சிக்கப் படுவதற்கு எந்தச் சபையிலும் அங்கத்தினராகலாம் என்று பிசாசு உங்களை வஞ்சிக்க இடங்கொடாதிருங்கள். உங்கள் ஆத்துமாவின் இரட்சிப்பை சபைதான் தீர்மானிக்கிறது என்று தேவன் சொல்லுகிறார். ஆகவே, நீங்கள் புதிய ஏற்பாடு காட்டும் கிறிஸ்துவின் சபையில் அங்கமாகும்படி உங்கள் ஆத்துமாவை இரட்சித்துக்கொள்ளுங்கள். ஆமென்! ✝

# யேசபேல் இருதயத்தில் பிரச்சினை கொண்டவள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதல்களையும், ஸ்தோத்திரங் களையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வித்தியமான கால சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எந்த அறிவாளியும், எந்த மருத்துவமும், எந்தத் தலைவனும் ஏன் இப்படி, எத்தனை நாட்களுக்குள் தீர்வு என்று உறுதியாய் கூறமுடியாத நிலையில் உலகமானது தன் காலத்தை நகர்த்திக் கொண்டுள்ளது. நாமும் தள்ளாடிக் கொண்டுள்ளோம். எல்லாவற்றையும் தமது திருவுளச் சித்தத்தின்படி செய்து கொண்டிருக்கும் தேவன் அனைத்தையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். தேவனுக்கு ஒரே ஒரு நோக்கம்தான். தான் படைத்த மனிதன் தன் பட்கத்தில் வர வேண்டும் என்பதே அது. ஆனால், நடந்து கொண்டிருப்பது என்ன? மனிதன் தன்னைப் பெரியவனென்றெண்ணி, தேவனை மறந்து சுழன்று கொண்டிருக்கிறான். இந்த வேளையில் தீராத நோய்த் தொற்று. மனுக்குலம் சிலுவையை நோக்கிப் பார்க்க வேண்டும். பார்த்தால் பிழைப்புண்டு. ஆனால், இது நடக்கிறதா? இதைப்பற்றி யெல்லாம் சிந்திப்பதற்காகவே எழுதுகின்றேன். வேறொன்றும் இல்லை.

பெண்கள் நம் வேலையைப் பார்க்கலாம். ஆயினும், அளவுக்கதிகமாய் நம்மை நேசிக்கும் நம் தேவன் நாம் தட்டுத்தடுமாறி அலைய வேண்டாகென்றுதான் வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் வேண்டியளவு உதாரணங்களைக் கொடுத்து வைத்திருகிறார். இப்படி இரு, இப்படி இருக்க வேண்டாம் என்று பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். கெட்ட ஆண்களை விட கெட்ட பெண்களே மிகவும் மோசமானவர்களாக இருக்கிறார்கள். நல்ல குணாதிசயங்களைக் கொண்ட உயர்ந்த, சிறந்த தேவனுக்குப் பயப்பட்டு நாம் பரலோகத்திற்கு செல்ல உதவி செய்யும் பெண்கள் வேதாகமத்தில் இருக்கிறார்கள். மோசமானவர்களும் இருக்கிறார்கள். இம்மாதம் மிக, மிக

மோசமான இருதயம் கொண்ட யேசபேலைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம். தீமையிலிருந்து எச்சரிப்புப் பெற அது உதவியாயிருக்கும். தீமையையும், பாவத்தையும் பற்றிப் பேசும்போது வெளி 2:20–ல் யேசபேல் பெயர் இடம் பெற்றுள்ளது. இவளுடைய செயலை ஆவியானவர் மறக்கவே இல்லை. இஸ்ர வேலிலே தீர்க்கதரிசிகளை உபத்திரவப்படுத்தி, யெகோவா தேவனுக்கு விரோதமாய் செயல்பட்டு பாகால் வணக்கத்தை நிலைநாட்ட சகல முயற்சிகளையும் எடுத்தாள் இந்த **யேசபேல்** அவள் துணிச்சலும் அதிகாரமும் உச்சகட்டத்தை எட்டியது என்பதை I ராஜா :21:25 – ல் ஆவியானவர் எப்படி விளக்குகிறார் என்பதைப் பாருங்கள். தன் **மனைவியாகிய யேசபேல் தூண்டி விட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னைவிற்றுப்போட்ட ஆகாபைப் போல ஒருவனுமில்லை.** பெண்களுக்கான ஒரு இரக்கம், மென்மைத் தன்மை என்று எதுவுமே யேசபேலிடம் இல்லை. சகலத்தையும் அழித்ததோடு, **தீமை, துன்புறுத்தல்** ஆகிய இரண்டு கெட்ட குணங்களின் உற்பத்தி ஸ்தலமாக இருந்து, அவைகள் இரண்டு தேசங்களாகிய இஸ்ரவேல் மற்றும் யூதாவில் பல நூற்றாண்டு களாக வெள்ளம் போல் பெருகெடுத்தோடியது.

எதற்குமே பயப்படாத எலியா தீர்க்கதரிசி இந்த ஆகாப், யேசபேலின் தீமையோடு எதிர்த்து நிற்கக் கூடாமல் தனியாக ஓடி ஒளிந்து கொள்ளுமளவிற்கு நிலைமை போய்விட்டது. [ I இராஜா: 19:4–18 ] யேசபேல் என்று சொல்லும் பொழுது மூன்று சம்பவங்கள் நம் நினைவிற்கு வரவேண்டும்

1. கர்மேல் பர்வத்தில் எலியா தீர்க்கதரிசிக்கும், பாகல் தீர்க்தரிசி களுக்கிடையே நடந்த போட்டி [ I இராஜா : 18:17–40 ]
2. நாபோத்தின் திராட்சை தோட்டம் [I இராஜா: 21:16]
3. யேசபேலின் கோர மரணம். [I இராஜா : 30–37].

சரி, இந்த யேசபேலின் இருதயம் இப்படியெல்லாம் கெட்டுப்போனதற்கு என்ன காரணம்? வெளிப்புறம், உட்புறம் மற்றும் மாமிசசிந்தை, ஆவிக்குரிய சிந்தை என்று இரண்டு சுபாவங்கள் மனிதனுக்குள் இருக்கின்றன. [II கொரி 4:16 ] தேவனுக்கு வேண்டியதெல்லாம் ஒருவருடைய வளமான ஆவிக்குரிய இருதயம். அதை வைத்துத்தான் அவர் எடை போடுகிறார். மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தைப் பார்ப்பான் ; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றுள்ளது [I சாமு:16:7]. இங்கே யேசபேலின் அகங்கார பார்வையையும், தோரணையையும் தேவன் பார்த்தார்.

இப்படி அவள் இருதயம் கெட்டுப் போனதற்கு என்ன தவறு நடந்தது? **அவள் தவறான கடவுளை** வணங்கினாள். பக்தி அவளுக்கு இருந்தது. ஆனால், அது சரியான பக்தியில்லை. என்னையன்றி வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். [யாத் : 20:3] என்று தேவன் சொல்கிறார். தேவனை விட மேலாக வேறு ஒரு பொருள் இருதயத்தில் முதலிடம் பெறுமானால் அதுதான் விக்கிரகம். நித்திய உண்மையென்னவென்றால், ஒருவன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யமுடியாது.

யேசபேல் சுயநலமும், சுயசார்பும் உடையவளாய் இருந்தாள். விளைவுகள் எதுவாக இருந்தாலும் அதை சற்றும் பொருட் படுத்தாமல் தான் நினைத்ததை செய்து முடிப்பவள்தான் இந்த யேசபேல். யேசபேலின் விருப்பம் நிறைவேற இந்த உலகத்திலுள்ள எல்லோரும், இன்னும் எல்லாமே அவளைச் சுற்றி வரவேண்டும் என்று எண்ணுபவள். அவளோடு ஐக்கியம் கொண்டிருப்பவர் களை படாதபாடு படுத்திவிடும்.

யேசபேல் ஒரு பேராசைக்காரி. அவளும், அவள் கணவன் ஆகாபும் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை அடைய ஆசைப்பட்டார்கள். [I இராஜா :21:1-14]. யார் செத்தாலும், பிழைத்தாலும் தன் ஆசை நிறைவேற வேண்டும் என்று எண்ணுபவள். முழு அதிகாரத்தையும் தன் கையில் எடுத்துக் கொண்டு தன் கணவனை தப்பு செய்யத் தூண்டுகிறாள்.

ஆகாபும் யேசபேல் திட்டத்திற்கு உடன்பட்டு விடுகிறான். தேவன் எப்போதுமே பெண்களை தலைமை தாங்கவோ, அதிகாரம் செலுத்தவோ, ஆளுகை செய்யவோ அனுமதி கொடுக்கவில்லை [I பேது :3:1-5]. ஆகாப், யேசபேலைத் தவிர வேறு யாரையாவது திருமணம் செய்திருந்தால் அவன் மொத்த வாழ்க்கையை வேறு மாதிரி போயிருக்குமோ? சொல்லப் போனால் அவன் இருதயம் அவ்வப்போது கொஞ்சம் மனஸ்தாபப்படுகிற ஒன்றாகவே இருந்தது.

யேசபேல் மதத்தையும், சட்டத்தையும் வைத்து நாபோத்தை கொலை செய்தாள். கடினமான, மிகவும் கொடூரமான இருதயத்தை அவள் கொண்டிருந்தாள். தொடர்ந்து தண்ணீர் விட்டுக் கொண்டேயிருந்தால், கல் கூட விரிசல் விடுமாம். ஆனால், இந்த பூமியிலே ஒன்றுமே செய்யமுடியாத என்று ஒன்றிருந்தால் அது கடின இருதயம் தான். இப்படிக் கடின

இருதயம் கொண்டிருந்ததால் கொலை செய்ய தூண்டப்பட்டாள். இவளுக்கு பயந்துதான் மாபெரும் தீர்க்கதரிசியாகிய எலியா ஓடி ஒளியவேண்டியாயிற்று. புதிய ஏற்பாட்டிலே (I யோவான்: 3:15) –ல் **தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராதென்று அறிவீர்கள்** என்று வாசிக்கிறோம்.

யேசபேல் சண்டை உண்டு பண்ணுகிறவள். யேசபேல் எங்கெல்லாம் செல்கிறாளோ அங்கெல்லாம் சண்டையும், சச்சரவும் நிழல் போல தொடரும். கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் போன்றவை அடங்கும். (நீதி 6 :19 ). நீதியான காரியங்கள் இவளுக்கு கேவலாமாகவும், இழி வாகவுமே தோன்றும். எனவேதான், எப்போதும் எலியாவையும், தேவனுடைய மற்ற தீர்க்கதரிசிகளையும் வெறுத்தாள்.

இப்படியாக தேவனை வெறுத்து, தேவ சட்டங்களை வெறுத்து தனக்கே அழிவைத் தேடிக் கொண்டாள். தேவனை எதிர்ப்பதினால் தேவனோ, அவருடைய கட்டளைகளோ அசைக்கப்படுவதில்லை. ஆனால், எதிர்த்து நம்மையே நாம் சிதைத்துக் கொள்கிறோம். யேசபேலின் வாழ்க்கை உயிருள்ள உதாரணமாக இருக்கிறது. இந்த அக்கிரம செயலிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள முடியும். அவர்களைப் பின்பற்றியல்ல மாறாக, அவர்கள் செய்த தவறை நாம் செய்யக் கூடாது. பிறரைப் பகைத்து, தீமை செய்து, பிறகு தனக்கு தானே விரோதியாகிக் கொண்டாள். தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான் (கலா:6:7).

இதை வாசிக்கும் அருமையான சகோதரிகளே, எல்லோரும் பாவம் செய்கிறார்கள். ஆனால், கிருபையும், இரக்கமுமுள்ள நம் தேவன், சிருஷ்டி கர்த்தா அதற்கு தீர்வை கொடுத்திருக்கிறார். இயேசுவின் இரத்தத்தால் இருதயம் கழுவப்படும். எப்போது? வசனத்தை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கை யிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்போது பாவம் கழுவப்பட்டு இருதயம் சுத்திகரிக்கப்படும் (எபி: 11:6; ரோ:10:10; அப்: 2:38; ரோம் 6:3,4).

இருதயத்தை சுத்தமாக வைத்து பரலோகம் செல்ல ஆயத்தமாயிருப்பதே மனுக்குலத்தின் மகா பெரிய பொறுப்பாயிருக்கிறது. இதை புரிந்து வாழ்வோம். தேவன் அதற்கு உதவி செய்வாராக! ஆமென்! ஆமென்!! ✝

வாலிபர் பகுதி

# பச்சையான ஒலிவ மரம்

Dr. **ஏபில் நாயகம்**

**உ**லகமனைத்தும் கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கியிருக்கிறது. நம்பிக்கையற்ற ஒரு மனநிலைக்கு பெரும்பாலானோரை கொரோனா தள்ளியிருக்கிறது. பயம் ஒரு பக்கம், கவலை மறுபக்கம் என அனைவரையும் திக்குமுக்காட வைத்திருக்கிறது. கொரோனாவைப் பற்றி யோசித்துப் பார்த்தால் அனைவருமே மன அழுத்தத்திற்கு ஆளாகிவிடுவார்கள். அந்த அளவுக்கு விவரிக்க முடியாத ஒரு பாதிப்பை இந்த கொடும் தொற்று ஏற்படுத்தியுள்ளது.

நம்பிக்கையூட்டும் வார்த்தைகளை கிறிஸ்துவ உலகம் தேடிக்கொண்டிருக்கிறது. உற்சாகமான ஒரு மனநிலையை பலர் நாடுவதைப் பார்க்க முடிகிறது. இப்படிப்பட்ட காலகட்டத்தில் மெய் சமாதானத்தையும் நிகரில்லா நம்பிக்கையையும் பெற என்ன வழி என்ற கேள்வி பலருக்குத் தோன்றும். அதற்கான ஒரே பதில் **தேவனுடைய வார்த்தைகளே!**

சங்கீதம் 52: 9 ம் வசனத்தை நான் வாசித்த போது, என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கிய ஒரு சொற்றொடர் தான் பச்சையான ஒலிவமரம். தாவீது தன்னை **பச்சையான ஒலிவமரம்** என்று சொல்கிறதை கவனியுங்கள். **நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன். தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பி யிருக்கிறேன் என்று.**

வேதாகமத்தில் **பச்சையான** ஒலிவமரம் என்று இரண்டு இடங்களில் மட்டும் நாம் வாசிக்க முடியும். ஒன்று சங் 52:9; மற்றொன்று எரேமியா : 11:16 – **நல்ல கனி உண்டாயிருக்கிற நேர்த்தியும் பச்சையுமான ஒலிமரமென்னும் பேரை கர்த்தர் உனக்கு இட்டார் என்று** இஸ்ரவேலைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு இடங்களில் மட்டுமே பச்சையாக ஒலிவமரம் என்ற பதத்தை நாம் வாசிக்கமுடியும்.

சங்கீதக்காரனாகிய தாவீது, **நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போல இருக்கிறேன்** என்று கூறுகிறார். வெறும் ஒலிவமரம் அல்ல – பச்சையான ஒலிவமரம். அவர் அப்படி கூறுவதற்கான காரணம் என்ன? எப்படி அதை அவரால் அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடிந்தது?

நாம் வாழும் இந்த இக்கட்டான காலக்கட்டத்தில் நாமும் பச்சையான ஒலிவமரத்தைப் போல இருக்கவேண்டும் என்று யாசிப்போம். அது எப்படி சாத்தியம் என்று கீழே தியானிப்போம்.

பிரியமானவர்களே! முதலாவது, நாம் எங்கே நாட்டப் பட்டிருக்கிறோம் என்பது மிகவும் முக்கியம். நம் மனது விரும்பின இடத்திலே நாட்டப்பட்ட ஒலிவமரமாக இருக்கிறோமா அல்லது தேவனுடைய ஆலயமாகிய அவருடைய பிரசன்னத்திலே நாட்டப்பட்டவர்களாக இருக்கிறோமா என்ற கேள்வியை நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.

எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் பச்சையான செழிப்பான ஒலிவமரமாக இருக்க விரும்பினால், நம் தேவனுடைய பராமரிப்பின் கீழ் இருக்கும் ஒலிவமராமாக இருக்க வேண்டும். அப்படியானால், அவர் மீது நம்பிக்கைக் கொண்டு, அவரைச் சார்ந்து அவருக்குக் கீழ்ப்படிந்து அவரையே தஞ்சமாகக் கொண்டிருக்கும் ஒலிவமரமாக இருக்க வேண்டும். நீங்களும் நானும் இருக்கிறோமா? அப்படிப்பட்ட ஒலிவமரமாக.

எரேமியாவில் வாசித்த 11:16 லும் இதே கருத்தைத்தான் வாசிக்கிறோம். இஸ்ரவேலர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரை நம்பி அவர் சத்தத்திற்கு கீழ்ப்படிந்தபடியினாலே அவர்களுக்கு **நல்ல கனி உண்டாயிருக்கிற நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரம்** என்ற பெயரை **தேவன்** இட்டார்

அருமையானவர்களே! இந்நாட்களில் நம்பிக்கை இழந்து துவண்டு போய் துக்கம் நிறைந்து வாடிப்போன ஒலிவமரமாக நீ இருக்கிறாயா? அன்பான தேவ பிள்ளையே சகோதரனே! சகோதரியே! நம்பிக்கை இழக்க வேண்டாம். துவண்டு போக வேண்டாம். துக்கத்தோடும், கவலையோடும் இருக்க வேண்டாம். நீங்களும் நானும் தேவன் மீது

முழு நம்பிக்கை வைத்து, அவர் சித்தத்திற்கு நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்து, அவர் கொடுத்த பரிசுத்த வார்த்தைகளின் உபதேசப்படி வாழும் போது சங்கீதக்காரனைப் போல, இஸ்ரவேல் ஜனத்தைப் போல நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரமாக இருக்க முடியும். அவர் கொடுக்கும் மெய் சமாதானத்தையும், நிகரில்லா நம்பிக்கையையும் நாம் பெற்றுக் கொள்ளமுடியும். எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

சங் 52:8 ன் இரண்டாம் பகுதியை வாசிக்கும் போது, **தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கி றேன்** என்று தாவீது கூறுவதைக்காண வாசிக்க முடியும். எந்த ஒரு கஷ்டம் வந்தாலும், இக்கட்டான சூழ்நிலையிருந்தாலும் எந்த நிலைமையிலும் தேவனுடைய கிருபையை நம்பியிருக்கிற பிள்ளைகளாக நாம் வாழ கற்றுக்கொள்ள வேண்டும். நேற்று, இன்று, நாளை என்றில்லாமல் எந்நாளும் தேவ கிருபையினால் நம்மை தாங்கிக் கொண்டுள்ளது.

பொதுவாக, ஒலிவமரத்தின் தன்மை, அது 1000 ஆண்டு வரை வாழக்கூடியது. இன்னும் தன்னுடைய வேர்களை ஆழமாக எடுத்துச் செல்லும் ஒரு மரம். எனவே, நீண்ட நாள் உயிர் வாழவும், தனது கனிகளை ஏற்ற காலத்தில் கொடுக்கவும் அதற்குத் தேவையான ஒன்று ஆழமான வேர்கள். அதுபோல், நாம் என்றென்றைக்கும் வாழும் பச்சையான ஒலிவரமாக இருக்க வேண்டுமானால், நாம் தேவனுடைய வீட்டிலே நாட்டப் பட்டிருக்கிறோம் என்பது மட்டும் முக்கியமல்ல. தேவபக்தியில் எவ்வளவு ஆழமாக வேரூன்றி தேவனுக்காகவே வாழ்ந்து கொண்டுள்ளோம் என்பது மிகவும் முக்கியம்.

நிச்சயமாகவே, நாம் ஓர் இக்கட்டான காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில் நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியம் இல்லை. எந்த நிலையிலும் பச்சையான நேர்த்தியான ஒலிவமரமாக நம்மால் இருக்க முடியும் நம் வாழ்வில் இருக்க முடியும். எப்பொழுது? நாம் நம் தோட்டகாரராகிய தேவனுடைய பராமரிப்பில் இருந்தால்! ஆம், உன்னதமானவரின் மறைவில் இருக்கிறவன் சர்வவல்ல வருடைய நிழலில் தங்குவான். (சங். 91:1).

ஆகவே, தேவன் மீது நம்பிக்கை வைப்போம். தாவீதைப் போல நாமும் பச்சையான ஒலிவமரமாய் தேவனுடைய ஆலயமாகிய சபையில் நிலைத்திருப்போம். ஆமென்!! ✝

சிறுவர் பகுதி

# உண்மையுள்ள நண்பர்கள்

Dr. *பிரெய்ஸி*

ஹாய் குட்டீஸ்! நீங்கள் எல்லாரும் நன்றாயிருக்கிறீர்களென்றும், எங்கள் மாத பத்திரிக்கையை தவறாமல் வாசிக்கிறீர்களென்றும் நம்புகிறேன். இந்த நாட்களில் நீங்கள் உங்கள் இரகசியங்களை பகிர்ந்து கொள்ளும் உங்கள் நண்பர்களை அதிகமாக நினைப்பீர்களென்று எனக்குத் தெரியும், ஏனென்றால், அவர்கள் எப்போதும் பள்ளியில் உங்களோடிருந்து உதவி செய்வார்கள். அப்படித்தானே! இந்த மாதம் தங்கள் நண்பன் நோயிலிருந்து சுகம் பெற அவனுக்கு உதவிய சில உண்மையுள்ள நண்பர்களைப் பற்றி புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு சம்பவத்தை உங்களுக்கு சொல்லப் போகிறேன்.

மாற்கு 2:1–13 வசனங்களில், திமிர்வாத நோயினால் அவதிப்பட்ட தன் நண்பன் இயேசு கிறிஸ்துவினால் சுகம் பெற நான்கு நண்பர்கள் எப்படி உதவிசெய்தார்கள் என்று பார்க்கிறோம். இங்கே நண்பர்கள் இயேசு கிறிஸ்து எந்த வீட்டில் ஜெபித்துக் கொண்டும், தேவனுடைய வார்த்தையை போதித்துக் கொண்டும் இருந்தாரோ அந்த வீட்டின் கூரையைப் பிரித்து, திமிர்வாதக்காரன் கிடந்த படுக்கையை இறக்கினார்கள். தன் நண்பனுக்காக இந்த நான்கு நண்பர்களும் எவ்வளவு முயற்சி எடுத்து உதவியிருக்கிறார்கள் என்று பாருங்கள்! அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு இயேசு கிறிஸ்து மகிழ்ச்சியடைந்து உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லி அவனை சுகப்படுத்தினார்.

எனவே சிறுகுழந்தைகளே, இச்சிறு சம்பவத்திலிருந்து இரண்டு காரியங்களை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம் முதலாவது, இந்த நண்பர்களுக்கிருந்த விசுவாசம் இரண்டாவது, இவர்கள் சிரமங்களுக்கு மத்தியில் சரியான நபரிடத்தில், அதாவது, நம் கர்த்தரிடத்தில் கொண்டு வர அவர்கள் எடுத்த **பிரயாசம்.** நீங்கள் எல்லோருமே உங்கள் நண்பர்களுக்கு உண்மையுள்ள நண்பர்களாயிருந்து உங்கள் உண்மையுள்ள தேவனைப்பற்றி அவர்களுக்குச் சொல்ல வேண்டும். சரியா?

**அன்புடன்,**

**உங்கள் பிரெய்ஸி அக்கா.** ✝

# ஒற்றுமை என்பது வெறும் வெற்று வார்த்தையா?

Bro. **பென்னி மார்ட்டின்**

**பி**ரியமான திருமறை ஆசான் வாசகர்களே! உங்கள் யாவருக்கும் வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய நாட்களில் கிறிஸ்தவ சமுதாயத்தை நாம் சற்று உற்றுப்பார்த்தால் ஒற்றுமை எனும் ஒற்றைசொல்லுக்கு மிகப்பெரிய பஞ்சம் ஏற்பட்டிருப்பதை நாம் ஏகமனாதாக ஏற்றுக் கொள்வோம். உலகமுழுவதும் பெரும்பாலான மதங்கள் பிரிவினைகளால் பிளவுபட்டுக் கிடக்கின்றன, இதில் பாதிப்பிரிவினர் ஒரு துருவத்திலும் மீதிப்பிரிவினர் எதிர் துருவத்திலும், பிரிந்து கிடக்கின்றனர். ஒருபக்கம் மிதமிஞ்சிய அடிப்படை வாதத்திலும், மற்றொருபுறம் தாராளமயக் கொள்கையிலும் மூழ்கிக்கிடக்கிறது. இந்த ஆவிக்குரிய உலகம் தங்களைக் தாமே வானுலகின் வாரிசுகள் என்று வாயார வாழ்த்திக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் மத்தியில் கூட இப்பிரிவினை மனப்பபான்மை ஒரு சவாலாகவே இருந்துவருகிறது. ஒரு முனையில் ஒரு சாரார் கிறிஸ்துவின் ஆவியை ஒட்டுமொத்தமாக இழந்து தாங்கள் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளுக்காக ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும் கண்டிக்கத் தயாராயிருக்கிறார்கள். மறுமுனையில், மற்றொரு சாரார் வேதவாக்கியங்களின் உபதேசத்தை ஒரு ஓரமாக வைத்துவிட்டு, கிறிஸ்துவை விசுவாசிப்பதாகச் சொல்லிக் கொள்கிற எல்லோருக்கும் தங்கள் ஐக்கியக் கதவுகளைத் திறந்து வைப்பதை பார்க்கிறோம்.

ஒற்றுமை என்பதற்கு ஒருமைப்பாடு, ஒருங்கமைவு, ஒன்றாயிருத்தல் போன்ற பொருள்கள் உள்ளன. ஆவிக்குரிய வாழ்வில் ஒற்றுமையின் பங்களிப்பு அளப்பரியது என்பதை அறிந்து கொண்ட சங்கீதக்காரன் அதன் அழகையும், அருமையையும் தன் இருதயத்தின் வார்த்தைகளால் வர்ணிக்கிறார். ''இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது. எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது'' (சங்கீதம் 133:1) இவ்வசனத்தில் ஒற்றுமை எனும் நற்கீற்றை சங்கீதக்காரர்

இரண்டு உதாரணங்களைக் கொண்டு விரிவாக விளக்குகிறார். முதலாவது, இந்த ஒற்றுமை இஸ்ரவேலில் பிரதான ஆசாரியனாக ஆரோனை அபிஷேகம் பண்ண பயன்படுத்தப்பட்ட நறுமணத் தைலம் போன்றது என்கிறார். எப்படி இந்த நறுமண தைலம் ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றுப்பட்டு அவனுடைய அங்கிகளில் மேல் இறங்குகிறதோ, அப்படியே சகோதரர் மத்தியில் காணப்படும் ஒற்றுமையும் ஓர் இனிமையான தாக்கத்தை ஏற்படுத்தி, தனிமையை தவிர்த்து நறுமணம் கமழச் செய்கிறது. இரண்டவாதாக, இந்த விலையேறப்பெற்ற ஒற்றுமை எர்மோன் பர்வதத்தின் பனி போன்றது என்கிறார். வடக்கு பாலஸ்தீனத்தில் பார்வைக்கு பளிச்சென காட்சியளிக்கும் எர்மோன் பர்வதத்தி லிருந்து இறங்கிவரும் பனி சற்று கனமானதாக யிருக்கும். அப்பனி தாவரங்களின் மீது படரும் போது இரவில் மழை பொழிந்தது போல் காட்சியளிக்கும். எப்படி அப்பனி வறண்ட பாலைவனத்தின் தாவரங்களுக்கு ஊட்டச்சத்து அளிக்கிறதோ அப்படியே ஒற்றுமையும் வீட்டிற்கும், நாட்டிற்கும் ஊக்கத்தை அளிக்கிறது. இது ஆரோக்கியமான ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கிறது.

I **ஒற்றுமை ஏன் வேண்டும்?**

பொதுவாகவே, உலகத்தின் மக்கள் அக்கறையின்றி கிறிஸ்தவர்கள் மீது வைக்கும் குற்றச்சாட்டு கிறிஸ்தவர்கள் ஒற்றுமையில்லாதவர்கள், மார்க்கத்தின் மீது பற்றில்லாதர்கள், கிறிஸ்தவத்தில் பல பிரிவுகள் உண்டு என்பவைகளாயிருக் கின்றன. நம்முடைய இசைவின்மை காரணமாக, அவர்கள் நமக்கெதிராக பயன்படுத்தும் வசைமொழிகள் தசை அடிகளாகவே அமைகின்றன. நம் சமாதனப்பிரபுவாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையபப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக கூட இந்த ஒற்றுமைக்காக ஜெபித் திருக்கிறார் என்றால் அது எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நினைத்துப்பாருங்கள். நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகி றேன்; அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக

நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும், வேண்டிக் கொள்ளுகிறேன். யோவான் 17:20,21 இவ்வசனப்பகுதியில், இந்தக் கடைசிப் பகுதி மிக முக்கியமானது. அதாவது, நாங்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளும் கிறிஸ்தவர்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை உலகத்தின் மக்கள் கிறிஸ்துவை விசுவாசியாமல் இருப்பதற்கு காரணமாக அமைவது நம் இதயத்துடிப்பை சில நொடிகள் நிறுத்திவிடுகிறது.

இன்றைய நாட்களில் முன்பெப்போதுமில்லாத அளவுக்கு இளைய தலைமுறையினரிடம் பிரிவினை தலைவிரித் தாடுவதால் அவர்களிடையே ஒற்றுமைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சபையானது கர்த்தருடைய மரணத்திற்குப் பிறகு ஏறக்குறைய ஐம்பதாவது நாளில் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. சில காலத்திற்கு இந்த ஒற்றுமைத்தான் கர்த்தருடைய சபையை மற்றவர்களுக்கு அடையாளப்படுத்தியது. ஆதிக் கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம்பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42) இதன் விளைவாக இரண்டு அதிகாரங்களுக்குப் பிறகு விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர் களாயிருந்தார்கள் என்று நாம் வாசிப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. இங்கே நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், அந்நாட்களில் அத்தனை திரளான விசுவாசி களிடையே பிரிவினை இல்லாமல் ஒற்றுமை உணர்வு இருந்ததென்றால் இந்நாட்களில் சொற்ப எண்ணிக்கையில் இருக்கும் நாம் எந்த அளவு ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும்? சண்டைகளும், சச்சரவுகளும் நிறைந்த இவ்வுலகில் கிறிஸ்தவம் ஒற்றுமையின் மார்க்கம் என்று ஓங்கி ஒலிக்கச் செய்யும் பொறுப்பு நமக்கு தரப்பட்டுள்ளது, அதைத் துறக்கவோ மறுக்கவோ நமக்கு உரிமை இல்லை. எபேசியர் 4:4 – 6 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் ஒற்றுமைக்கான அடித்தளத்தை அமைக்கிறார், உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது

போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு, ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. இங்கே ஒரே சரீரம் அல்லது ஒரே சபை ஒரே நம்பிக்கை போன்றவற்றை அடிப்படையாக வைத்து, பவுல் ஒற்றுமைக்காக வேண்டுகோள் விடுப்பதை கவனியுங்கள் அருமையானவர்களே, நாமெல்லாரும் ஒரே கர்த்தரை விசுவாசித்து, ஒரே உபதேசத்தை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிந்தால் நாம் எப்படி பிரிந்திருக்க முடியும்? எனவே, கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒற்றுமையை ஒற்றை இலக்காக கொள்வோம். அநேகரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவருவோம்.

II **பிரிவினை ஏன் கூடாது?**

நம் பரிசுத்த தேவனுக்கு பிரிவினை என்பது பிரியமில்லாத ஒன்றாகயிருக்கிற படியால் அதை நாம் எவ்வித பரிவுமின்றி அதை எதிர்க்கவேண்டும். பிரிவினை என்பது பிசாசின் தந்திரமாயிருக்கிறது. முதல் நூற்றாண்டு சபை பிரிவினையின்றி ஒற்றுமையாக இருந்தபடியால் தான் அபாரவளர்ச்சியடைந்து அன்றைய உலகில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது பிரிவினையைக் குறித்து பிதாக்களின் காலம் தொடங்கியே பல எச்சரிப்புகள் விடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக பிரிவினையையும், வாக்குவாதத்தையும் விரும்பாத ஆபிரகாம் லோத்தை நோக்கி : எனக்கும் உனக்கும் என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம் **நாம் சகோதரர்** என்றான் (அதியாகமம் 13:8). இங்கே ஆபிரகாம் ஒற்றுமைக்கு உளை வைக்கும் ஒரு நிலை ஏற்பட்டபோது தன் ஆஸ்திகளோ உடைமைகளோ பறிபோனாலும் பரவாயில்லை பிரிவினைகூடாது என்று சமாதானத்தை விரும்பி விட்டுக் கொடுத்திருக்கிறார். பிரியமானவர்களே, நம் வாழ்க்கையின் பல கட்டங்களில் விட்டுக் கொடுக்காமலிருந்தால் ஒற்றுமை சீர்குலைகிறது என்பதை நாம் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்; சிலர் ஒற்றுமையைப் பற்றி சற்றும் கவலையேபடாமல் வெற்றிபெறுவதிலேயே குறியாயிருந்து பிரிவினைக்கு வழிவகுத்துவிடுகிறார்கள். ஒருவர் எப்போதும் தன் வார்த்தையிலும் வாழ்க்கையிலும் வெற்றி பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. சில காரியங்களை நாம் விட்டுக்கொடுக்கும்போது பிரிவினையைத் தவிர்க்க முடியும்.

பிரிவினை தேவன் அருவருக்கும் ஏழுகாரியங்களில் ஒன்றா யிருக்கிறபடியால் அதை நம்மைவிட்டு அறவே ஒழித்து விடவேண்டும் [நீதிமொழிகள்6:19]. பவுல் ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல் களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையா யிருந்து அவர்களை விட்டு விலக வேண்டுமென்று புத்தி சொல்கிறார்.[ரோமர் 16:17]. அதேபோல் கொரிந்து சபையில் பிரிவினை சம்மந்தமாக நடந்தேறிய கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்த பவுல் நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைபேசவும் பிரிவினை களில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ள வர்களைப் சீர்பொருந்தியிருங்கள் என்று மன்றாடுகிறார். [1கொரிந்தியர் 1:10] பிரியமானவர்களே! கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கும் பிரிவினையைகளைந் தெரிந்து, இருள் சூழ்ந்த இவ்வுலகில் ஒற்றுமை எனும் ஒளியை வீசச்செய்து ஒரு கூட்டத்தாரை ஒன்றான மெய்தேவனிடத்திற்கு கொண்டுவருவோம், அதற்கு தேவன் தாமே உதவிச் செய்வாராக! ஆமென்! ✝

## சிறந்த நாள்

**இவ்வுலகில் பெரும்பாலானோர் மனிதன் முதன்முதலாக சந்திரனில் கால் பதித்த அந்த நாள்தான் சிறந்தநாள் என்று நினைக்கிறார்கள். மனிதஇனம் சந்திரனுக்கு சுற்றுலா சென்று வரலாமேத்தவிர அங்கே போய் ஒரேயடியாக குடியேற முடியாது. உண்மையாகவே, மனித இனத்துக்கு சிறந்த நாள் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த அந்த நாள்தான். மனித இனத்தின் ஒட்டு மொத்த பாவத்தையும் போக்கும் வல்லமை இயேசு கிறிஸ்துவுக்கு மாத்திரமே உண்டு.**

# உபயோகமான உபதேசம்!

Bro. **பாண்டியன்**

**க**ர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அநேக போதனைகளை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். செழிப்பான வாழ்க்கைக்கும், நிம்மதியான வாழ்வுக்கும் வேண்டிய ஆலோசனைகளை மனுஷர் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஆனால், அவைகளில் பெரும்பாலானவைகள் ஏட்டுச்சுரைக்காய் போல பிரயோஜன மற்றதாயுள்ளது. ஏசாயா 48:17ல் **பிரயோஜனமாய் இருக்கிறதை உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே!** என்கிறார் நம்முடைய தேவன். பொருளாதார வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்து சொந்த குடும்ப உறவுகளை சாதாரணமாக பிரித்து வைக்கிறது இவ்வுலகம்: ஆனால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்க வேண்டும் என்கிறது வேதம். ஆகவே, தேவனுடைய போதனை எப்படி மனுஷருக்கு பிரயோஜனமானது என்பதை சற்றே பார்ப்போம்.

பொதுவாகவே, நமக்கு பிடிக்காதவர்கள் என்று யாரையாவது நம் மனது தீர்மானித்துக்கொள்கிறது. அதினால் வெறுப்பு, வாக்குவாதம் போன்ற பிரயோஜனமற்ற வழக்காடுதல் ஏற்படுகிறது. (I தீமோ 2:14) வாழ்க்கைக்கு மிக பிரயோஜன முள்ள, நேரடி தொடர்புள்ள விஷயங்களையே தேவனுடைய வார்த்தை எடுத்துரைக்கிறது. உதாரணத்திற்கு, **கோபம்** என்கிற உணர்வு தவறானது என்று தெரியாமலே அநேகர் தங்களை கெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால், மூடனுடைய கோபமே சீக்கிரம் வெளிப்படும் என்கிறார் ஞானிசாலமோன். கோபக் காரனுக்கு தோழனாகாதே என்ற பிரயோஜனமான டிப்ஸையும் தருகிறார். நம் எஜமானர் இயேசுவோ **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்** என்கிறாார். கிறிஸ்துவின் இப்படிப்பட்ட உபதேசம் மாத்திரம் இல்லாதிருக்குமானால் உலகம் என்றோ சீராழிந்து இருக்குமல்லவா? கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள் என்கிறது அப். உபதேசம்.

**அடுத்து பாவம் :** பொதுவாக டிவி விளம்பரங்கள், நாடகங்கள், சினிமாக்கள் எல்லாம் பாவம் என்பது ஒரு சாதாரண விஷயம் போலவும், அது தப்பேயில்லை என்பது போலவும் மக்களுக்கு சித்தரித்து காண்பிக்கிறது. ஆனால், கொரோனா வியாதியை விட பன் மடங்கு ஆபத்தானது பாவம் என்கிறது வேதம். எதுவெல்லாம் பாவம் என்பதை பட்டியலிட்டு வெளிச்சம் போட்டு தேவவசனம் காண்பிக்கிறது. அது நம்மை நரகத்திலே தள்ளும் வஞ்சனையுள்ளது என்று வேதம் மாத்திரமே எச்சரிக்கின்றது. அதில் இருந்து தப்பிக்கொள்ளவே தேவன் தம் ஒரே பேறான குமாரனை சிலுவையில் ஒப்புக் கொடுத்தார் என்பதிலேயே மனுஷன் பாவத்தின் ஆபத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்னொரு பிரயோஜனமான போதனை **பழிவாங்குதல்** பற்றியது. பதிலுக்கு பதில் செய்வது நியாயம் என்கிறது உலக போதனை. மனிதனுடைய மனமும், உணர்ச்சிகளும் அப்படியே நடக்கத் தூண்டுகிறது. ஆனால், எத்தனையோ பேர்கள் தங்கள் வாழ்வில் உறவுகளை இழந்து வருந்துகிறார்கள், நிம்மதி இல்லாமல் மனஉளைசலுக்கு ஆளாகிறார்கள். வித்தியாசமாக கிறிஸ்துவின் உபதேசம் மட்டுமே தீமையோடே எதிர்த்து நிற்காதே என்கிறது. இது உலகின் மனோதத்துவ டாக்டர்கள் கூட சொல்லாதது! உணர்ச்சிகளை வெளிப்படுத்திவிடு என்கிறது. உலக ஞானம் கட்டுப்படுத்துதலே சிறந்தது என்கிற பிரயோஜனமான போதனை தருவது நமதாண்டவரின் போதனை (ரோம12:19).

மனுஷரை மிகவும் பாதிக்கக்கூடியது **நிந்தை** மற்றும் **அவமானம்.** இத்தகைய சூழ்நிலை மனுஷனை கோபம், எரிச்சல் அல்லது சோகம், கொலை எண்ணங்களை தூண்டி அவனை சிரழிக்கிறது. ஆனால் தேவ பிள்ளைகளுக்கான ஆலோசனை என்னவெனில் உன் வெட்கத்தை தேவன் அறிந்திருக்கிறார் என்பதே மிகப்பெரிய ஆறுதலாயிருக்கிறது. மேலும், நமக்கு பல முன் மாதிரிகள் வேதத்தில் இருப்பதால், நிந்தையையும், அவமானத்தையும் என்னைவிட்டு அகற்றும் என்று கேட்டு உதவி பெறும் சிலாக்கியத்தையும் ( சங்.119:22) நாம் பெற்றுள்ளோம். தேவனுக்கு நன்றி சொல்லுங்கள். கிறிஸ்துவும் தமக்கு முன் வைத்துள்ள சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை சகித்தார் ( எபி.12:2). அப்போஸ்தலர் கூட சந்தோஷமடைந்தார்கள்

(அப்5:41). எனக்கு தெரிந்து சத்துருவை சிநேகிக்கவும், அவனுக்கு நன்மை செய்யவும் வலியுறுத்தும் போதனை கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற போதனைகளில் சிறந்ததாக கருதுகிறேன். இன்றைய சமுதாயத்தில் அது இல்லாததால் இரத்த அழுத்தம், தூக்கமின்மை, மன உளைச்சல்களில் ஆளாகி எவ்வளவு ஆஸ்தி இருந்தும் அனுபவிக்க முடியாமல் மனிதன் சாகிறான். நாம் ஆராதிக்கும் தேவன் பட்சபாதமில்லாமல் மழை, வெயில் ஆகியவற்றை அளிப்பதால் நாமும் பூரணசற்குணராயிருக்க கிறிஸ்து கட்டளையிடுகிறார். அவரே நமக்கு முன் மாதிரியாக வையப்படும் போது பதில் வையாமலிருந்தார். நம் பாவங்கள் மன்னிக்கப்பட நாமும் பிறரை மன்னிக்க வேண்டும் என்பது ஆண்டவரின் முக்கிய போதனையாகும்.

பிறருக்கு **உதவி செய்யும்** விஷயத்தில் பிறரைப் போல பதில் செய்வார்கள் என எதிர்பார்த்து செய்யக்கூடாது (லூக் 6:34). உன்னிடத்தில் கேட்கிறவனுக்கு முகங்கோணங்தே என்றும் பார்க்கிறோம். அதே நேரம் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்தவும், பிறருக்கு உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி தான் உதவ வேண்டும் (1பேது 4:11). விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கு முன்னுரிமை தரவும் நாம் போதிக்கப்பட்டுள்ளோம்.

அதேபோல், நமக்கு நேரிடும் சோதனை மற்றும் சிட்சையில் சோர்ந்து போகாமலிருக்கவும் அறிவுறுத்தப்படுகிறோம். பொருளாதாரக் கஷ்டங்களிலும் நம்மிக்கையோடு இருக்கவும் இருக்கிறவைகள் போதுமென்று எண்ணும் பக்குவமும் வேண்டும். எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் பெலன் உண்டு என்கிறார் பவுல். எனக்கன்பான தேவபிள்ளைகளே, நம் ஆவிகளில் தகப்பன் நமக்கு பூமிக்குரிய, ஆவிக்குரிய பிரயோஜனமான எல்லா போதனை களையும் நமக்குக் கொடுத்துள்ளார்.

அதை நாம் மனத்தாழ்மையோடே ஏற்று இவ்வுலகில் நடைமுறைப்படுத்தினால்தான் மறுமையில் தேவசமூகத்தில் பிரவேசிக்க முடியும். இதை உணர்ந்து அவருடைய பிரயோஜனமான போதனைகளை பின்பற்றி நடந்து இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுவோமாக. தேவக்கிருபையும் சமாதானமும் நம் அனைவரோடுகூட இருப்பதாக. – ஆமென்!! ✝

# இருள் சூழ்ந்த வேளையில் ...

Bro. K. M. *பிலிப்*

பூமியில் வாழ்கின்ற மனிதனுடைய வாழ்க்கையில் வெளிச்சமும், இருளும் மாறி மாறி வந்து கொண்டுதான் இருக்கும். இதை மனிதன் ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப தன்னை தயார் நிலையில் வைத்துக் கொள்கிறான். ஆனால், எப்பொழுதும் இருள் சூழ்ந்த நிலையே இருக்குமானால் அவன் நிலை என்ன? இதை இப்பொழுது (கொரோனோவால்) எல்லோரும் அனுபவிக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. சமுதாயம் நிலைகுலைந்து மன அளவில் இருள் சூழ்ந்திருப்பதைக் காண்கிறோம். இந்நிலையில் தேவப் பிள்ளைகளாகிய நம்முடைய நிலை என்ன? நாம் எப்படி இருளை எதிர்கொள்வது? என்பதை அனுபவ வாயிலாக அணுகி, இருளை வெளிச்சமாக்கிக்கொண்ட ஒரு தெய்வீக மனிதனின் வரலாற்றிலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொண்டு கலக்கமில்லாமல் வாழ்வோம்.

அவர்தான் **தாவீது.** ஆம், தாவீதின் வாழ்க்கை எல்லோருக்கும் எல்லாவித சூழ்நிலையிலும் சரியான நல்ல அனுபவங்களையே கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது. இன்றைய இருள் சூழ்ந்த நிலையிலும் அவரது அனுபவமே நமக்குச் சிறந்த பாடமாக வழி காட்டுதலாக அமைந்துள்ளது. சற்று ஆழ்ந்து கவனிப் போமேயானால் **தேவனுடைய இருதயத்திற்கேற்ப** நடந்து கொண்ட தாவீதுக்கு நல்லதொரு எதிர்காலமே காத்திருந்தது. அதற்கான வழிகளும் திறந்தே வைக்கப்பட்டிருந்தது. நன்மைகள் அவரை தேடியே வந்தது. ஆடு மேய்த்த தாவீது எதற்கும் ஆசைப்படவில்லை. ஆனால், இராஜாவாகும் அபிஷேகம் அவனை வீடு தேடி வந்தது (I சாமு : 16:12,13). அவன் எதையும் எதையும் எதிர்பார்த்து ஏலாம் பள்ளதாக்கில் இருந்த இஸ்ரவேலின் பாளையத்திற்குச் செல்லவில்லை. ஆனால், அவன் அரண்மனைக்குள் நுழையும்படியான வாய்ப்பாக கோலியாத்தை சந்தித்து வெற்றி வாகை சூடினான்(17). அவன் எதையும் நாடிச் செல்லவில்லை; ஆனால், சவுல் இராஜாவின் கண்கள் அவனை நாடியது (17:85,18:2) இராஜா மகன் யோனத்தானின் உயிரைப் போன்ற சிநேகம் நாடி வந்தது. இராஜாவின் மருமகனானான்; படைத்தளபதியும் ஆனான்; இஸ்ரவேல் யூத ஜனங்களுமாகிய யாவருடைய சிநேகத்தையும் பெற்றான்(18:16). இப்படிப்பட்ட வாழ்க்கையின் உச்சத்தில் தான், பிரகாசமான நிலையில்தான்

தாவீதை இருள் சூழ்ந்து கொண்டது. வாழ்விலும் நல்ல உயர்வான நிலையில், சந்தோசம் சமாதானம் நம்மை சூழ்ந்த நிலையில், ஜெபிப்பதில் வேதத்தை தியானிப்பதில், விசுவாசத்தில் வளர்ச்சி பெற்று சபையில் உற்சாகமாய் இருக்கும் நிலையில் நம்மையும் கூட இருள் சூழும் என்பதை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். ஆனாலும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட நம் வாழ்க்கையில் இதன் அனுபவம் என்னவாக இருக்க வேண்டும் என்பதை கவனிப்போம்.

தாவீது கோலியாத்தை வென்றதையும், படையெடுப்பில் எதிரிகளை வென்றதையும் ஜனங்கள் மகிழ்ச்சியோடு ஆடிப் பாடும் பொழுது, சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று பாடினார்கள் (18:7). இதைக் கேட்ட சவுல் அழுதது முதற்கொண்டு தாவீதுக்கு காய்மகரமாய் பார்த்தான். அது முதல் தாவீதை இருள் சூழ ஆரம்பித்தது. பொல்லாத ஆவி சவுலை அலைக்கழித்த போது தாவீது அவனுக்கு முன் சுரமண்டலத்தை வாசித்து சவுலை ஒரு நிலைப்படுத்துவான். அப்பொழுது சவுல் இரண்டு முறை ஈட்டியால் தாவீதை குத்திக் கொன்று போட முயற்சித்தான். தாவீதோ இரண்டுமுறையும் தப்பினான். தொடர்ந்து மகள் மீகாளை திருமணம் செய்வித்து படைத் தளபதியாக்கி போருக்கு அனுப்புவதன் மூலம் தாவீதை கொன்றுபோட சவுல் திட்டமிட்டான். ஒரு கால கட்டத்தில் சவுல் தாவீதைக் கொல்வதில் மிகத்தீவிரமாய் இருந்தான் (19:11). தாவீது தன்னால் இயன்றளவு மிகச்சிறப்பாக, சரியாக நன்மையே செய்தபோதும் கூட, மிக மோசமான நிலைமையை சந்தித்ததான். **இதோ என் பிராணனுக்கு பதிவிருக்கிறார்கள்; கர்த்தாவே என்னிடத்தில் மீறிதலும், பாவமும் இல்லாதிருந்தும் எனக்கு விரோதமாய் கூட்டம் கூடுகிறார்கள். என்னிடத்தில் அக்கிரமம் இல்லாதிருந்தும் ஓடித்திரிந்து யுத்தத்திற்கு ஆயத்த மாகிறார்கள்** (சங்:59:3,4) என்றும், சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து என் பிராணனை தரையோடே நசுக்கி வெகு காலத்துக்கு முன் மரித்தவர்கள் போல் என்னை இருளில் இருக்கப் பண்ணுகிறான் (143:3) இச்சூழலில், மீகாள் யோனத்தான் உதவியால் சவுலை விட்டு விலகி தனி ஒருவனாக தாவீது அதுல்லாம் கெபிக்குப் போனான்.

ஆம், இருள் சூழ்ந்த வேளையில் அதனை எதிர்கொள்ள தாவீது ஞானமாய் செய்த சரியான செயல் – முதலில் தன்னை

**தனிமைப்படுத்திக் கொண்டான்.** தாவீது பயந்து, அதிர்ச்சியடைந்து, தன்னை தனிமைபடுத்தி கொள்ளவில்லை. அவன் கொடிய மிருகங்களைாகிய சிங்கத்தையும், கரடியையும் கொன்றவன். கொடூரமான அரக்கன் கோலியாத்தை வீழ்த்தியவன், ஏற்கனவே, தேவனால் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டவன். மக்களின் செல்வமாக இவன் நினைத்திருந்தால் நொடிப்போழுதில் சவுலை எதிர்த்துப் போராடி அவனைக் கொன்றுவிட்டு தன்னை இராஜாவாக முடி சூட்டியிருக்க முடியும். ஆனால், தேவனுக்கு பயப்படுகிற, பக்தியுள்ள தாவீது தன்னை தனிமை படுத்திக் கொண்டான். தீமையை வீட்டு விலகுவதே செம்மை யானவர்களுக்கு சமனான பாதை (நீ:16:17). துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும் (சங் :1:1). தன்னைக்காத்துக்கொள்ள தீமையை விட்டு விலகி தன்னை தனிமைப்படுத்திக்கொண்டான். பிரச்சனைகளை ஜெபத்தின் மூலம் தேவனிடத்தில் தெரிவித்தான். (42:1,2;18:3,6)

தனிமை என்பது தண்டனைக்குரியதாகவோ பயத்திற்கும், கலக்கத்திற்கும் உரியதாகவோ நாம் நினைக்க வேண்டிய அவசியமில்லை. தனிமையை ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுத்தி நன்மைகளைக் காண வேண்டும். **யோசேப்பு** பெற்றோரை விட்டு, சகோதர்களை, நண்பர்களை, உறவுகளை விட்டு, தேசத்தை, மொழியை விட்டு தனிமைபடுத்தப்பட்டான். ஆனாலும், தேவனுக்கும் மனுசருக்கும் முன்பாக யோக்கிய மானவைகளையே தொடா்ந்து செய்து தேவன் தன்னோடு கூடவே இருக்கும்படி தக்க வைத்துக் கொண்டான். தனிமையில் அவன் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு ஞானமான பிரயாசமும் அவனை இராஜாவுக்கு அருகில் அதிபதியாக அமரச் செய்தது. **அன்னாளை** அவமானம், தோல்வி, துக்கம் என இருள் சூழ்ந்தது. அவளோ தன்னை தனிமை படுத்திக்கொண்டு ஒரு மனப்பட்டு ஊக்கமாய் தேவனை நோக்கி ஜெபித்தாள். அவள் இருள் நீங்கும்படி குழந்தை பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டாள். ( I சாமு:1). **தானியேலின்** நாட்களில் 30 நாள் வரை இராஜாவிடம் முறையிடவில்லை. பதிலாக தன்னை தனிமைப்படுத்தி நீதியுள்ள நியாயாதிபதியான தேவனிடத்தில் பிரச்சனையை ஜெபத்தில் வைத்தான். எந்த இராஜாவில் இருள் சூழ்ந்ததோ அதே இராஜாவால் இருள் அகற்றப்பட்டது. தேவ ஒளி நாடு முழுவதும் பிரகாசித்தது. ( தானி 6:1-28). நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்து கூட அப்படித்தான். இருள் சூழ்ந்த

வேளைகளிலெல்லாம் தன்னை தனிமைபடுத்தி கொண்டு ஜெபத்தின் மூலம் தேவனோடு உறவு வைத்துக்கொண்டார். (மத்:4:1,2; 14:23; லூக்கா 22:41,42,43). இருள் சூழ்ந்த பாதாளம் அவரை மேற்கொள்ள முடியவில்லை; உயிரோடு எழுந்தார். அன்பானவர்களே! நம் வாழ்க்கையிலும் இருள் சூழும் போதெல்லாம் நம்மை தனிமைப்படுத்தி தேவனிடத்தில் ஊக்கமாய் ஜெபிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

தனிமைபடுத்தப்பட்ட தன் இருதயத்திற்கேற்ற தாவீதை தேவன் தனிமையில் ஒடுங்கி, நிலை குலைந்து, ஒன்றுக்கும் உதவாதவனாக தேவன் விட்டுவிடவில்லை. தேவனோடு மட்டும் உறவு கொண்ட தாவீதுக்கு, அவன் சகோதரரும் தகப்பன் வீட்டாருமாக 400 பேர் அவனோடு கூட இருக்கும்படி தேவன் கொண்டுவந்தார். தாவீதை அவர்களுக்கு தலைவனாக்கினார். மிகப்பெரிய பொறுப்புகளைக் கொடுத்து தேவன் இருளை நீக்கிப்போட்டார். தாவீதும் தேவன் தனக்குக் கொடுத்த ஒவ்வொரு வாய்ப்பையும் சரியாய் பயன்படுத்திக் கொண்டு, இருள் என்னை மூடிக்கொள்ளும் என்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாய் இருக்கும்... இரவும் பகலைப் போல வெளிச்சமாய் இருக்கும் என்று கெம்பீரமாய்ச் சொன்னான் (139:11,12) (II சாமு 22:29,30). இப்படி தேவையற்ற உறவு அகன்றது, அன்பான நன்மையான உறவுகள் ஒட்டிக்கொண்டது. இருள் சூழ்ந்த வேளைகளில் பலர் பலவிதமாய் அலைகழிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால், தாவீதோ தன் பொறுப்புகளை நிறைவேற்றியதோடு அன்றும், இன்றும், என்றும் நம் இருதயத்தில் தொனிக்கும்படியான சங்கீதங்களைப் பாடினார். அது இன்றும் நம்மிடையே சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

பிரியமானவர்களே! நாமும் கூட தனிமைபடுத்தப்பட்ட இந்நாட்களில் நமக்காக நம்மோடிருக்கிற விசுவாசிகளுக்காக, ஊழியர்களுக்காக, நம்மை சுற்றியிருக்கிற தேவனற்றவர்களுக்காக உருக்கமாய் மன்றாடி ஜெபிப்போம். தொலைபேசி, வாட்ஸ்அப், பேஸ்புக், போன்ற நவீன கருவிகளின் உதவியால் நண்பர்களோடு, உறவினர்களோடு விசுவாசிகளோடு, வேத வசனங்களைப் பகிர்ந்து கொள்வோம். சபை வளர்ச்சிக்கான ஆலோசனைகளை ஆராய்வோம். **அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர் களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிற** நாம் இருள் சூழ்ந்த இவ்வேளையில் உற்சாகமாய் இருப்போம் (ரோ8:28) ஊக்கமாய் ஜெபிப்போம். தேவ ஒத்தாசை உங்கள் அனைவரோடும் இருப்பதாக! ஆமென்!! ✝

## ஒருவரை நித்திய ஜீவனுக்குள் வழி நடத்த

- சோர்வில் இருக்கும் ஒருவரை உற்சாகப்படுத்தும் வகையில் உங்களின் வார்த்தைகள் அமையட்டும்.
- கிறிஸ்து உங்கள் வாழ்வில் ஏற்படுத்திய நேர்மறையான தாக்கத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- உங்களை மோசமாக நடத்தியவர்களிடத்தில் உங்கள் பேச்சிலும், செயலிலும் மனநிலையிலும் உயரிய ஒழுக்க நெறியை வெளிப்படுத்துங்கள்.
- சபையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குறித்து உங்கள் நண்பர்களிடமோ அல்லது அயலகத்தாரிடமோ தெரிவித்து அவர்களை அன்பாய் அழையுங்கள்.

✝

## நாளும் நடப்பும்

- ரேஷன் கடைகளில் இனி அரிசியுடன் சேர்ந்து முகக்கவசம் இலவசம்.
- தபால் துறையின் அனைத்து சிறுசேமிப்புத் திட்டங்களும் கிளை அஞ்சலகம் வரை விஸ்தரிப்பு.
- கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள் தவிர மற்ற மாணவர்களுக்கு பருவத் தேர்வுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- கொரோனா கொள்ளை நோயால் இதுவரை இந்தியாவில் சுமார் பதினைந்து லட்சம்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், 33,000 பேர் பலி
- IPL கிரிக்கெட் போட்டிகளை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடந்த வாய்ப்பு பிரகாசமாக உள்ளது